மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# ஐங்குறுநூறு வெறிப்பத்தில் வெறியாடல் வழிபாடு

ச. ஸ்ரீதர்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பூ.சா,கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

## முன்னுரை

சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் திணை வகைகள் மற்றும் துறைவகைகளினால் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஐங்குறுநூறு வெறிப்பத்தில் தலைவியும், தோழியும் அஞ்சுகின்ற ஆவேசக்கூத்தாக வெறியாட்டு நிகழ்வினை கூறிச்செல்கின்றனர். ஐங்குறுநூற்றில் தலைவியினுடைய களவு வாழ்க்கையினை சொல்லுகின்ற முறையிலும், கற்பு வாழ்க்கைக்கு வழிகோலும் முறையிலும் தோழி வெறியாடல் நிகழ்வினில் பங்குபெறுகின்றாள். இலக்கியங்களில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்ற தோழியினுடைய இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்
மதியுடம் படுதல் ஒரு மூவகைத்த" (தொல். 1073)

என்று வரும் நூற்பாவில் கூறியிருக்கிறார். வெறிப்பத்து பாடல்களின் வழியாகத் தோழியானவள் வெறியாடல்களை விளக்கும் விதத்திணையும் தலைவியினுடைய மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கினைப் பற்றியும், மரபினைப் பின்பற்றும் முறையினைக் குறித்தும் ஆராய்வதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

## கழங்கின் மரபு

தொல்காப்பியர் களவியலில் வேலன் கழங்கு பார்த்த நிகழ்வு பின்வருமாறு,

"கட்டினுங் கழங்கினும் வெளியென இருவரும்
ஒட்டிய நிறந்தாற் செய்தி கண்ணும்" (உரு)(கள. 24)வரி 3

கட்டுவிச்சியும், வேலனும் தாம் பார்த்த கட்டினானுங், கழங்கினானுந்த தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யாவிடில் மையல்

தீராதென்று கூறுகிறான். நச்சினார்க்கினியார் இந்நூற்பாவிற்குப் பொருத்தடையதாக பாடலாக ஐங்குறுநூற்றுப் பாடலைக் குறிப்பிடுகிறார்,

"பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி,
மலை வான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவது என்றால்
நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே்
தலைவியானவள் ஒங்" (களவு 249)

வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவனை நினைந்துகொண்டே இருந்ததன் காரணத்தால் தலைவியினுடைய மேனி, நாள்தோறும் மெலிந்து கொண்டே செல்கிறது. இதனைப் பார்த்த நற்றாய் தலைவியின் மெலிவிற்கு காரணம் தெரியாமல் ஆழ்ந்த கவலையில் காணப்படுகிறாள். மேலும் மரபினைப் போற்றுகின்ற தாய் என்பதினால் இது தெய்வக்குற்றத்தினால் ஏறபட்டதோ என்று பயப்படுகிறாள். உடனே முருகபூசை அதாவது வெறியாடல் நிகழ்வுகள் எடுக்க பல முயற்சிகள் நடைபெறுகின்றன முருக பூசாரி என்பவன் வேலன் என்று அழைக்கப்படுகிறார். வேலன் வெறியாட்டுக் களத்தில் கழற்ச்சியினை இட்டு, தலைவிக்கு உண்டான மாற்றத்திற்கு முருகனே காரணம் என்று நவில்கின்றார்.

**வேலன் கூறுகின்ற வாய் மரபினை**

"பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தண்ணைக்கு
முருகமென மொழியும் வேலன்"(ஐங். 249)

என்ற பாடல் அடிகளினால் அறியலாம். இவற்றின் மூலம் தலைவியின் (காதல்) நோய்க்கு கழங்கின் மரபு மூலம் இதனைத் தெய்வச் சார்பே என்று எடுத்துரைக்கும் முறைமை காணப்படுகிறது. இதன் காரணமாகத் தலைமகள் அடைந்துள்ள வேறுபாட்டினைக் கழற்ச்சியினால் அறிய முடிகிறது. நற்றாயினால் ஏற்கப்பட்டு வரவேற்கும் மரபு முறையினை தோழியால் இகழப்படுகின்றது. காதல் என்ற நோயினைக் கழற்சியினால் அறியலாம். தலைவியினுடைய மன உணர்வினை உணர்ந்து கொள்ள முடியும் என்றால் அது தலைமகளின் கற்புக்கு மேன்மைக்கு அவமானம் அளிக்கும் செயல் என்பது தோழியின் எண்ணம் ஆகும்.

**மன அச்சத்தினை ஏற்படுத்துகின்ற வெறியாடல்**

வெறியாடல் என்னும் நிகழ்வு, தலைவிக்காக நற்றாயினால் எடுக்கப்படுகிறது. தலைவியினுடைய கூற்றுகள் நிகழும் இடத்தினை,

"வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்" (கள: பா.வரி 2)

என்று தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். இவ்வரி தலைவியின் உள்ளத்தில் காணப்படுகின்ற அச்சத்தைப் புலப்படுத்துகிறது. தலைவி பெற்ற துன்பத்தை நீக்கும்பொருட்டுத் தாயால் எடுக்கப்பட்ட வெறியாடல் நிகழ்வினால் தான் மேனிக்கு

மீண்டும் புதுப்பொலிவு பெற்றது என்று தலைவியானவன் நடிக்கின்றாள். ஆனால் தலைவன் தலைவியின் நடிப்பை உணராது தலைவியின் நோய் காதல் நோயல்ல வேறு நோய் என்று தவறாக நினைத்து விடுகிறான். தலைவன் தவறாக நினைப்பதற்கு வழிசெய்கின்ற வெறியாடல் நிகழ்வினைக் கண்டு தலைவி அச்சம் கொள்கிறாள். ஐங்குறுநூற்றில் தலைவிக்கு வெறியாட்டிடத்து மனதில் ஏற்படுகின்ற அச்ச உணர்வினை,

"நாம்முறு தயரம் நோக்கி யன்னை
வேலற் றத்தா ளாயினங் வேலன்
வேறிகமர நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயித் நோயே" (ஐங். 241)

என்ற வரிகளால் வெறிப்பத்து எடுத்துக் கூறுகிறது. தாயால் ஏற்பாடு செய்யப்பட்ட வெறியாடல் நிகழ்வில் வேலன் தலைவியினுடைய உள்ளத்தின் இருக்கின்ற தலைவனைப் பற்றி அறியுமோ? அறியாதோ? என்று தோழி தனது தோழி கூற்றும் தலைவிக்கு அச்சத்தையேற்படுவதைப் போன்றே வெறியாடல் நிகழ்வினை நடத்துகின்ற வேலனாகிய முருக பூசாரிக்கும் அச்சத்தை ஏற்படுத்தியதாகவே காட்சி அளிக்கிறது.

.................மற்று - அவன்
வாழிய சிலங்கும் அருவிச்
சூர் மலை நாடனை அறியாதோனே் (ஐங். 249)

இதனில் சூர் என்பதே அச்சத்தைப் பொருந்திய வேலன் என்பதைக் கூறுகிறது.

**வெறியாடல் நிகழ்வினை விலக்கிக் களவினை வெளிப்படுத்துதல்**

களவு வாழ்க்கை கற்பு வாழ்க்கையாகவே நிறைவடையும் முறையினைத் தலைவி எக்காலத்திலும் விரும்புவாள், தலைவியினுடைய விருப்பத்தைப் படிப்படியாக எடுத்து கூறுகிறாள் தோழி. வெறியாடல் நிகழ்வினை விளக்கிக் களவினை வெளிப்படுத்துகின்ற முறைக்கு அறத்தொடு நிற்றல் என்று துறைப்பெயர் வழங்கப்படுகிறது.தலைவியின் உடல் மெலிவு கண்டு நற்றாய் வெறியாடல் நிகழ்வுக்கு வேண்டிய முறையினைச் செய்கிறாள். தலைவியினுடைய மாற்றத்திற்கு உண்டான காரணத்தைத் தோழி அறிவாள். இந்த சூழலைச் சாதகமாகக் கொண்டு தலைமகன் களவு வாழ்க்கையினை நற்றாய்க்கு எடுத்துக் கூறுகிறாள் தோழி. தலைவியினுடைய மேனியிலிருந்து ஒளிபொருந்திட ஆபரணங்கள் நெகிழ்ந்து விடாமலும் குன்றம் நோக்கி நின்றாலே தனிந்து விழும் என்று தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்கிறாள் இதனை,

"பூங்கெழ குன்ற நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கு முரிந்தனு தெற்ற நோயே" (ஐங்.பா. 210)

மேலும்,

"ஆய் மலர் உண்கண் பசப்பட

சேய் மலை நாடன் செய்த நோயே" பா. 242)

என்ற பாடலடிகளும் தோழியின் செயல்பாட்டினை எடுத்துரைக்கின்றன.

வெறியாட்டு நிகழ்வில் களத் தொடர்புடையதாகத் தாய் குறிப்பாக உணர்வதற்குத் தோழியானவள் வழி செய்கின்ற முறையினைக் காணமுடிகிறது.

**வரைவு கடாதலைப் பற்றி வற்புறுத்துகின்ற களம்**

களவு வாழ்க்கையில் மிகுதியான இன்பத்தினைப் பெற்றுத் தலைவனைக் கற்பு வாழ்க்கையினை மேற்கொள்ளச் செய்யுபடி தோழி வற்புறுத்துவதே வரைவு கடாதல் எனப்படும். களவு கற்பில் நிறைபெறுவதே கற்பின் நெறிக்குப் பெருமை ஆகும். கற்பிற்குக் களங்கத்தை ஏற்படுத்துகின்றவகையில் அன்னை வெறியாடல் நிகழ்வினை நடத்த கட்டுவிச்சியால் குறிபார்க்கப்பட்டு நாள் குறிக்கின்றனர். வெறியாடல் நிகழ்வு நடைபெறும் முன்பே தலைவனைத் தலைவி விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறு ஏற்படுத்தப்படுகிறாள். இதனை,

"பொய்யா மரபின் ஊர்முது வேலன்

கழங்கு மெய்ப் படுத்து, கன்னம் விக்கி,

"முருகு" என மொழியும் ஆயின்,

கெழுதகை இவள் அணங்கியாற்கே? (ஐங். 245)

என்ற பாடலின் வரிகள் கூறுகின்றன.

**முடிவுரை**

1. வெறியாடல் என்ற நிகழ்வில் எதிர்மறையான எண்ணங்களை உடையவர்கள் பங்குபெறும் முறையாகத் திகழ்கிறது.
2. வெறியாடல் நிகழ்வில் சமுதாயச் சடங்கு மற்றும் கற்பொழுக்கத்திற்கும் இடையிலான போராட்டத்தினைக் காணமுடிகிறது.
3. ஐங்குறுநூற்றில் வெறிப்பாட்டு வெறியாடல் வழிபாட்டின் மூலம் நற்றாய், தலைவி தோழி இவர்களின் ஆழ்மன உணர்வினை அறிய முடிகிறது.
4. நற்றாய், தலைவி, தோழி இவர்களின் கற்பு நெறியினைப் போற்றுகின்ற முறைமையையும் காண முடிகின்றது.
5. மரபுகள் வழி, வழியாக மறிக்கப்படுகின்ற போக்கினையும், அறிந்து கொள்ள முடிகிறது.